**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE OF KARUR.**

| | | |
|---|---|---|
| Spl. Sessions Case No. | : | 21/2023 (Mother Case in S.C.No. 48/2021) |
| | : | Prosecution - **PW-29** |
| Deposition of witness for | : | Defense |

| | | | |
|---|---|---|---|
| Name | : பிரபு | Father's Name : | |
| Village | : | Taluk | : |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act 44 of 1969 of the 20th day of March 2024.

**(7ம் எதிரி மணிகண்டன் (எ) கூல்மணி, 9ம் எதிரி உதயநிதி (எ) சூர்யா ஆகிய 7 மற்றும் 9 எதிரிகள் ஆஜர் இல்லை. குவிமுச. 299ன் கீழ் எதிரிகள் முன்னிலையில்லாமல் சாட்சி விசாரணை செய்ய உத்தரவிட்டதின் அடிப்படையில் சாட்சி விசாரிக்கப்படுகிறார்).**

**<u>முதல் விசாரணை</u>**

நான் வேலாயுதம்பாளையம், காந்திநகரில் வசித்து வந்து, ஆம்புலன்ஸ் ஓட்டுநராக பணிபுரிந்து வந்தேன். தற்போது வேறு வழக்கு சம்மந்தமாக திருச்சி மத்திய சிறையில் விசாரணை கைதியாக இருந்து வருகிறேன். சாட்சி முருகேசன் என்பவரை எனக்கு தெரியாது. இவ்வழக்கு சம்பவத்தன்று நான் மதியம் என் வீட்டிற்கு சாப்பிட சென்றிருந்தேன். சம்பவம் நடந்த இடத்திற்கும், நான் ஆம்புலன்ஸ் நிறுத்தியிருந்த இடத்திற்கும் இடையில் 800 மீட்டர் இடைவெளியிருந்தது. நான் ஆம்புலன்ஸ் டிரைவராக இருப்பதால், நான் சம்பவ இடத்திற்கு சென்று பார்த்தேன். நான் அங்கு செல்வதற்கு முன்பு, பிரேதத்தை .....

வேறொரு ஆம்புலன்சில் ஏற்றிச்சென்றார்கள். இவ்வழக்கு சம்மந்தமாக போலீசார் விசாரித்தபோது, மேற்சொன்னவாறு கூறினேன். அதற்கு என்னிடம் கையெழுத்து வாங்கினார்கள். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியாது. நான் அவர்களை பார்த்ததில்லை.

மேற்சொன்ன சாட்சியை பிறழ்சாட்சியாக கருதி, அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி, அனுமதியின் பேரில் குறுக்கு விசாரணை

கடந்த 17.12.2020 அன்று 12.30 மணிக்கு நானும், என் நண்பர் முருகேசனும், மூலிமங்கலம் பிரிவு ரோடு அருகேயுள்ள மதுபானக்கடையில் மது வாங்கிக்கொண்டு, நாணப்பரப்பு பெட்ரோல் பங்கிற்கு எதிரே உள்ள பழைய ஹாலோபிளாக் கம்பெனியில் உட்கார்ந்து மது அருந்திக்கொண்டிருந்தபோது, எனக்கு ஏற்கனவே தெரிந்த கலையரசனும், அவரது நண்பர்கள் பிரசாத், பிரசாந்த், கோகுல்நாத் ஆகியோர் பிராந்தி வாங்கிக்கொண்டு, எங்களுக்கு அருகில் வந்து, மது அருந்திக்கொண்டிருந்தார்கள் என்றும், அப்போது எங்கடா ரஞ்சித்குமார் இன்னும் வரலை என்று அவரை ஒருவருக்கொருவர் கெட்டவார்த்தையால் திட்டிக்கொண்டிருந்தார்கள் என்றும், நானும், முருகேசனும் அங்கேயே படுத்துக்கொண்டோம் என்றும், அதன்பிறகு, மாலை 3.00 மணிக்கு மேல் மேற்பசொன்ன நபர்கள் அனைவரும் டாஸ்மாக் கடைக்கு சென்று, மது வாங்கி வந்து, மது அருந்திக்கொண்டு, வேகமாக சத்தம்போட்டுக்கொண்டிருந்தார்கள் என்றும், அப்போது வேலாயுதம்பாளையம் மணி என்பவர், பின்னர் பெயர் கேட்டுத்தெரிந்த சூர்யா, சீனு ஆகியோர் வந்தார்கள் என்றும், அவர்கள் கோபமாக மதுரையை சேர்ந்தவர்களிடம் பேசினார்கள் என்றும், மதுரைக்காரர்கள் கலையரசனிடம் என்ன என்று விசாரித்தார்கள் என்டுறும், அப்போது கலையரசன், மதுரைக்காரர்களிடம், நேற்று பகல் 12.00 மணிக்கு ரஞ்சித்குமாருடன் மது அருந்திக்கொண்டிருந்தபோது, ரஞ்சித்குமார், கலையரசனிடம் உனக்கு கல்யாணம் ஆகவில்லை, உனக்கு கல்யாணம் பண்ணி, உன் மனைவியை என்ன

பண்ணப்போற, என்கிட்ட அனுப்பிவிடு, நான் நிறைய காசு தருகிறேன், அதை வச்சு உன் கடனைஎல்லாம் கட்டிக்கோ என்று தகாத வார்த்தையால் பேசியதாகவும், அதனால் கலையரசனுக்கும், ரஞ்சித்குமாருக்கும் தகராறு ஏற்பட்டு, ரஞ்சித்குமார், கலையரசனை அடித்தார் என்றும், கலையரசனையும், அவர் நண்பர்களையும் அடிக்கடி துன்புறுத்துவதாகவும் சொன்னார்கள் என்றும், அதை கேட்ட கூல்மணி, ஏற்கனவே திருச்சி ஜெயிலில் தான் இருந்தபோது ரஞ்சித்குமார் தன்னை மிரட்டியதாக சொல்லி, நாம் எல்லோரும் சேர்ந்து ரஞ்சித்குமாரை போட்டுத்தள்ளுவோம் என சொல்லி, கிரியிடம் கூல்மணி ஆயுதங்களை எடுத்து வரச்சொன்னார் என்றும், கிரி அவரது ஸ்கூட்டியில் சென்று ஒரு வீச்சருவாள், வாள்கத்தி ஆகியவற்றை ஒரு சாக்கில் போட்டு எடுத்து வந்தார் என்றும், அதை பார்த்து நாங்கள் அங்கிருந்து பயந்துபோய் வந்துவிட்டோம் என்றும், அதன்பின்னர், 17.12.2020 அன்று மாலை 4.00 மணிக்கு வழக்கு சம்பவம் பற்றி தெரிந்துக்கொண்டேன் என்றும், அதன்பிறகு 23.12.2020 அன்று கூல்மணி, சீனி ஆகியோரை வேலாயுதம்பாளையம் காவல்நிலையத்தில் வைத்துள்ளதை கேள்விப்பட்டு, நாங்கள் காவல்நிலையம் சென்று, அவர்களை பார்த்தோம் என்றும், அப்போது காவல்நிலையத்தில் இருந்த ஆய்வாளரிடம் ரஞ்சித்குமாரை கொலை செய்வதை பற்றி அவர்கள் பேசிக்கொண்டதை சொன்னேன் என்றும், தற்போது, எதிரிகள் என் ஊரைச்சேர்ந்தவர்கள், நண்பர்கள் என்பதால் அவர்களை காப்பாற்றுவதற்காக உண்மையை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

ஒம்/. ஆர்.சண்முகசுந்தரம்,<br>
முதன்மை மாவட்ட நீதிபதி,<br>
கரூர்.

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE OF KARUR.**

| | | |
|---|---|---|
| Spl. Sessions Case No. | : | 21/2023 (Mother Case in S.C.No. 48/2021) |
| | : | Prosecution - **PW-30** |
| Deposition of witness for | : | Defense |

| | | | |
|---|---|---|---|
| Name | : முகமது அபு | Father's Name : | |
| Village | : | Taluk | : |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act 44 of 1969 of the 20th day of March 2024.

**(7ம் எதிரி மணிகண்டன் (எ) கூல்மணி, 9ம் எதிரி உதயநிதி (எ) சூர்யா ஆகிய 7 மற்றும் 9 எதிரிகள் ஆஜர் இல்லை. குவிமுச. 299ன் கீழ் எதிரிகள் முன்னிலையில்லாமல் சாட்சி விசாரணை செய்ய உத்தரவிட்டதின் அடிப்படையில் சாட்சி விசாரிக்கப்படுகிறார்).**

<u>முதல் விசாரணை</u>

நான் கரூர், மாவடியான் கோவில் தெருவில் வசித்து வந்து, எனது அப்பாவுடன் ரியல் எஸ்டேட் தொழில் செய்து வந்தேன். தற்போது வேறு வழக்கு சம்மந்தமாக திருச்சி மத்திய சிறையில் விசாரணை கைதியாக உள்ளேன். வேலாயுதம்பாளையத்தை சேர்ந்த டியோ நவீன் என்பவரை எனக்கு தெரியும். அவரது நண்பர்கள் கலையரசன், விக்னேஸ்வரன் ஆகியோர்களை எனக்கு தெரியாது. இவ்வழக்கு சம்மந்தமாக போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

மேற்சொன்ன சாட்சியை பிறழ்சாட்சியாக கருதி, அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி, அனுமதியின் பேரில் குறுக்கு விசாரணை

போலீசார் என்னை விசாரித்தார்கள் என்றும், அந்த விசாரணையில் நான், திருச்செந்தூர் KSR கல்லூரியில் படித்தபோது, என்னுடன் அதே கல்லூரியில் படித்து வந்த வேலாயுதம்பாளையத்தை சேர்ந்த நவீன் என்பவர் என் நண்பர் என்றும், அவர் மூலமாக வேலாயுதம்பாளையத்தை சேர்ந்த விக்கி (எ) விக்னேஷ்வரனை என் அண்ணன் என நவீன் அறிமுகப்படுத்தியதால் அவரும் எனக்கு பழக்கம் என்றும், அவர் மதுரையை சேர்ந்தவர்எ ன்றும், அவர் மூலமாக மதுரையை சேர்ந்த கூல்மணி எனக்கு பழக்கமானார் என்றும், கடந்த 16.12.2020 அன்று, கலையரசனும், அவர் நண்பர் கூல்மணியும் என் வீட்டிற்கு வந்து, ஒரு துணிபேக்கை என் வீட்டில் வைத்துவிட்டு சென்றுவிட்டு சென்றனர் என்றும், அதன்பிறகு, 17.12.2020 அன்று மாலை 5.00 மணிக்கு கலையரசன் எனக்கு போன் செய்து, அவர்கள் வைத்து சென்ற பேக்கை கரூர், அமராவதி ஆற்று அருகே கொண்டு வரச்சொன்னார் என்றும், நான் அந்த பேக்கை எடுத்துக்கொண்டு, அங்கு சென்றேன் என்றும், அங்கு கலையரசன், கூல்மணி ஆகியோருடன் 9 பேர் அவர்கள் ஆடையில் இரத்தக்கறையுடன் இருந்தார்கள் என்றும், அருகில் மூன்று இருசக்கர வாகனங்கள் இருந்தது என்றும், அதன்பிறகு கலையரசன் என்னிடம் இருந்த பேக்கை வாங்கி, அவரது உடையை அமராவதி ஆற்றில் வீசிவிட்டு, நான் கொடுத்த பேக்கிலிருந்த துணியை எடுத்து போட்டுக்கொண்டார் என்றும், பார்த்ததை யாரிடம் சொல்லக்கூடாது, மீறி சொன்னால், கரூரில் இருக்க மாட்டாய் என்று மிரட்டி சென்றார்கள் என்றும், இது சம்மந்தமாக காவல்துணை கண்காணிப்பாளர் விசாரித்தார் என்றும் சொல்லிவிட்டு, தற்போது எதிரிகள் என் நண்பர்கள் என்பதால், அவர்களை காப்பாற்றுவதற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

ஒம்/. ஆர்.சண்முகசுந்தரம்,
முதன்மை மாவட்ட நீதிபதி,
கரூர்.

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE OF KARUR.**

| | | |
|---|---|---|
| Spl. Sessions Case No. | : | 21/2023 (Mother Case in S.C.No. 48/2021) |
| | : | Prosecution - **PW-31** |
| Deposition of witness for | : | Defense |

| | | | |
|---|---|---|---|
| Name | : அருள்செல்வன் | Father's Name : | |
| Village | : | Taluk | : |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act 44 of 1969 of the 20th day of March 2024.

**(7ம் எதிரி மணிகண்டன் (எ) கூல்மணி, 9ம் எதிரி உதயநிதி (எ) சூர்யா ஆகிய 7 மற்றும் 9 எதிரிகள் ஆஜர் இல்லை. குவிமுச. 299ன் கீழ் எதிரிகள் முன்னிலையில்லாமல் சாட்சி விசாரணை செய்ய உத்தரவிட்டதின் அடிப்படையில் சாட்சி விசாரிக்கப்படுகிறார்).**

**முதல் விசாரணை**

நான் காவல்துறையில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து ஓய்வு பெற்று, வெண்ணமலையில் வசித்து வருகிறேன். நான் கடந்த 17.12.2020 அன்று 22.00 மணிக்கு வேலாயுதம்பாளையம் காவல்நிலையத்தில் உதவி ஆய்வாளராக நிலையப்பொறுப்பில் இருந்தபோது, ரமேஷ், வயது 45, த/பெ. ராமசாமி, நெ.22, மேட்டுத்தெரு, புதுமாரியம்மன்கோவில் தெரு, அண்ணாநகர், தென்னூர், திருச்சி என்ற முகவரியை சேர்ந்த, தற்சமயம் தளவாப்பாளையம், கோழிப்பண்ணை, புகளூர் என்ற முகவரியில் வசித்து வந்தவர் நிலையத்தில் நேரில் ஆஜராகி .......

கொடுத்த புகாரைப்பெற்று, வேலாயும்பாளையம் கா.நி.கு.எண். 778/2020, ச/பி. 147, 148, 302 இதச-ன் கீழ் வழக்குப்பதிவு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.23.

பின்னர், முதல் தகவல் அறிக்கையையும், புகாரையும் இணைத்து விரைவு தபாலாக நீதித்துறை நடுவர் எண்.2 நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். மேல்நடவடிக்கைக்காக சம்மந்தப்பட்ட மேல் அதிகாரிகளுக்கு முதல் தகவல் அறிக்கையை அனுப்பி வைத்தேன். காவல் ஆய்வாளருக்கு வழக்குக்கோப்பை ஒப்படைத்தேன்.

இது சம்மந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

ஒம்/. ஆர்.சண்முகசுந்தரம்,
முதன்மை மாவட்ட நீதிபதி,
கரூர்.